**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. 1 COURT, NAMAKKAL.**

**STC.No. 1540/2022**

**PW - 1**

| **PW. 1 Cross** | ராகுல் த/பெ.கந்தசாமி | 11.03.2025 |
|---|---|---|

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the Date: 11.03.2025

**(எதிரி ஆஜர்)**

எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 145(2) NI Act–ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு MP.No.9/2024 –ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் மீண்டும் சாட்சியை அழைக்கப்பட்டு செய்யப்படும் குறுக்கு விசாரணை –

**விசாரணை தொடங்கிய நேரம் மாலை 04.38 மணி**

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :–**

1) நான் எந்த முகவரியில் வசித்து வருகிறேன் என்றால் 1/47, மாரப்பநாய்க்கன் பட்டி, பொம்மபட்டி அஞ்சல், நாமக்கல் ஆகும். எதிரி எங்கு வசித்து வருகிறார் என்றால் 238, எறங்காட்டு தோட்டம், எறங்காட்டூர், பெருமுகை, ஈரோடு மாவட்டம் ஆகும். எதிரிக்கும், எனக்கு என்ன வகையில் பழக்கம் என்றால் குடும்ப உறவு முறையில் பழக்கம் ஆகும். எதிரியின் குடும்ப விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எதிரி, அவரது மனைவி, இரண்டு பெண்குழந்தைகள் ஆகியோர்கள் உள்ளனர். எனது வீட்டிற்கும், எதிரியின் வீட்டிற்கும் சுமார் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 70 கி.மீ இருக்கும். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு விவசாயம் செய்யும் வகையில் மாத வருமானம் எவ்வளவு கிடைக்கும் என்றால் ரூ.40 ஆயிரம் கிடைக்கும்.

2) இதற்கு முன்னர் எதிரிக்கும், எனக்கும் வரவு செலவு இருந்து வந்ததா என்றால் இருந்தது, கைமாற்றாக என்னிடம் தொகை பெறுவார். இதற்கு முன்னர் வரவு செலவு இருந்ததது என்பதற்கு ஆதரவாக ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி எப்போது, எங்கு வைத்து என்னிடம் கடன் கேட்டார் என்றால் தொகை கடனாக பெறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் தொலைபேசியில் கேட்டார். காசோலை தொகையை ரொக்கமாக கொடுத்தேனா அல்லது வங்கி பரிவர்த்தனை மூலமாக கொடுத்தேனா என்றால் ரொக்கமாக தான் கொடுத்தேன். ரொக்கமாக கொடுத்த தொகையை எந்த தேதியில்

எதிரியிடம் திருப்பி கேட்டேன் என்றால் 26.06.2022 ம் தேதியன்று நான் கடனை திருப்பி கேட்டபோது பின் தேதியிட்ட காசோலையை எனக்கு வழங்கினார்.

3) மேற்படி விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நாமக்கல் வள்ளிபுரம் ரோட்டில் உள்ள அஷ்டலட்சுமி என்ற நிதிநிறுவனத்தில் நான் ஒரு பங்குதாரர் என்று சொன்னால் இல்லை. மேற்படி நிதிநிறுவனத்தில் எதிரி மார்ச் மாதம் 2019 ம் ஆண்டு கடன் பெறும்போது பூர்த்தி செய்யாமல் கையெழுத்திட்டு மட்டும் கொடுத்திருந்த காசோலையை வைத்து எனக்கு தனிப்பட்ட முறையில் எதிரி பணம் கொடுக்கவேண்டுவது போல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும், எதிரிக்கும் சட்டப்படியான முறையில் காசோலை கடன் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. சட்டப்படியான முறையில் காசோலை கடன் ஏற்படாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

(விசாரணை முடிவுற்ற நேரம்:– மாலை 04.45 மணி )

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை / கையொப்பம் செய்தார்.

C NANDHINI

Digitally signed by C NANDHINI
Date: 2025.03.11 18:52:25 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.